O.S.No:24 /2019
Date :16.02.2021
பெயர்.சிலோன்மணி (DW-1)
10 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை-

தாவா சொத்து விபரம் தெரியும். தாவா சொத்தின் சர்வே எண்.271/2. தாவா சொத்திற்கு முன்பு எங்கள் பெயரில் பட்டா இருந்தது. தற்பொழுது செந்தூரன் தனது பெயருக்கு மாற்றிவிட்டார். தாவா சொத்தில் வடபுறம் என்னுடைய சொத்து. எங்களுடைய சொத்து வடபுறத்தில் உள்ளது. அதில் கீழ்புறத்தில் ஆறுமுகத்தேவர் சொத்து உள்ளது. தாவா சொத்து முன்பு அரசு சொத்தாக இருந்தது. அரசு எனது கணவருக்கு தாவா சொத்தை கொடுத்தது. தாவா சொத்து தாய் வழி, தந்தை வழி பூர்வீகம் இல்லை. தாவா சொத்து இதற்கு முன்பு அரசு சொத்தாக இருந்ததற்கு ஏதாவது ஆவணத்தை தாக்கல் செய்தேனா என்றால் செய்துள்ளேன். எந்த ஆவணம் அரசு சொத்து என்பதை காட்ட ஆவணம் என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியாது. எனது எதிர் வழக்குரையிலும், முதல் விசாரணை வாக்குமூலத்திலும் தாவா சொத்து முன்பு அரசு சொத்தாக இருந்தது என்பதற்கு அரசு எனது கணவருக்கு கொடுத்தது என்பதையும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியிருக்கிறேன். எனது எதிர் வழக்குரையிலும், முதல் விசாரணை வாக்குமூலத்திலும் தாவா சொத்து முன்பு அரசு சொத்தாக இருந்தது என்பதற்கு அரசு எனது கணவருக்கு கொடுத்தது என்பதையும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் சர்வே எண்.71-ஐ இரண்டாக பிரித்து 271/1 ஆறுமுகத்தேவர், 271/2 பன்னீர் என்று பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பட்டா மாறுதல் உத்தரவு 19.06.1997 ல் ஏற்பட்டுள்ளது என்றால் தெரியும். 1997 க்கு முன்பாக தாவா சொத்திற்கு ஒரே சர்வே எண்ணாக 271 என்று தான் இருந்தது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ல் சர்வே எண்.271/1 விஸ்தீரணம் 9.03 ஏக்கர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பட்டா பாஸ் புத்தகம் வழங்கும் காலத்தில் சர்வே எண்.271 உட்பிரிவு செய்யப்படவில்லை என்றும் சர்வே எண்.271/1 க்கு விஸ்தீரணம் 9.93 வராது என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.3 எங்களால் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. 4 ம் பிரதிவாதி ஆறுமுகத்தேவர் பெயரோடு தவறாக ஏற்பட்ட கூட்டுப்பட்டாவை வைத்து நான் மோசடியாக தாவா சொத்திற்கு பாத்தியம் கொண்டாடுகிறேன் என்றால் சரியல்ல. எனது மகள் ரெபைக்கா முன்பு முதுகுளத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்திலும், பின்பு பரமக்குடி கோட்டாட்சியர் அலுவலகத்திலும் வேலை பார்த்து வந்தார். தற்பொழுது இராமநாதபுரம் மாவட்ட ஆட்சிதலைவர் அலுவலகத்தில் வேலை பார்த்து வருகிறார். எனது மகளின் செல்வாக்கை பயன்படுத்தி வருவாய் ஆவணங்களை மோசடியாக உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எனது மகளுக்கும், இதற்கும் எந்த சம்மந்தமில்லை. தாவா சொத்தில் வடபுறம் 6 ஏக்கர் நிலத்தில் 10 பிரதிவாதி அனுபவம் செய்து வருகிறார் என்றாலும், நானும், 4 ம் பிரதிவாதியும் சேர்ந்துகொண்டு 10 பிரதிவாதியின் பாத்தியத்தை மோசடி செய்ய பொய்யாக வழக்கு நடத்தி வருகிறோம் என்றால்

சரியல்ல. தாவா சொத்தின் வடபுறம் 6 ஏக்கர் நிலத்தை 10 ம்பிரதிவாதி தனது பெயருக்கு பட்டா மாற்றி அரசுக்கு வரி செலுத்தி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கும், எங்களுக்கும் எந்த சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

(ஒப்பம்/-R.கீதா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கடலாடி.